மாலை முரசு
பக்கங்கள் 15

## தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு



(எஸ்.நிதர்ஷன் )

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 09 வெள்ளிக்கிழமை 27.10.2023 அதிர்வு 88

### பகிரங்கமாகக் கொலைவெறிக் கூச்சல் எழுப்பும்

# அம்பிட்டிய தேரரை கைது செய்யுங்கள்!

### இல்லையேல் அங்கொடையில் அடையுங்கள் என்று மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து



“மட்டக்களப்பு அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், தெருச் சண்டியனாக மாறி, “தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன், கொல்லுவேன்” என்று மன நோயாளி போல் நடுத்தெருவுக்கு வந்து கதறுகின்றார். இவரை ஒன்றில் ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அல்லது பிடித்துக்கொண்டு போய் அங்கொடையில் அடைக்க வேண்டும்.” 04



## புறக்கோட்டையில் பாரிய தீ விபத்து!

### 23 பேர் வைத்தியசாலையில்



02

### அம்பிட்டிய தேரருக்கு எதிராக

## ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

### பொலிஸ்மா அதிபருக்கு சுமந்திரன் கடிதம்



மட்டக்களப்பில் அடாவடியில் ஈடுபடும் அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு எதிராகப் பொலிஸார் ஏன் இன்னமும் நடவடிக்கை 02

## காணாமல்போனோரின் உறவினர்கள் கைகலப்பு



### வவுனியாவில் ஏழு பேர் கைது

(கே.வசந்தரூபன்)

வவுனியாவில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கக் கூட்டத்தில் காணாமல் 04

## இனவாத நடவடிக்கைக்குத் துணைபோகாதீர்கள்; இலங்கையைக் கட்டியெழுப்ப ஒன்றிணையுங்கள்!

### அனைத்து அரசியல்வாதிகளுக்கும் ரணில் அழைப்பு

இனவாத நடவடிக்கைகளுக்கு அரசியல்வாதி கள் எவரும் துணைபோகக்கூடாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கையைக் கட்டியெழுப்பும் பணியில் அரசியல்வாதிகள் அனைவரும் இணைய வேண்டும்என்றும்அவர்அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு ரோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று நடைபெற்ற 'ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழா' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளார். 02













# அரச வன்முறைகளுக்கு எதிராக யாழில் ஆசிரியர்கள் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

அதிபர், ஆசிரியர்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளைக் கண்டித்தும், ஆசிரியர்களின் உரிமைகளை அடக்குமுறையால் பறிக்க வேண்டாம் என்று வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள் முன்பாக இன்று ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர், ஆசிரியர்களின் உரிமையை வலியுறுத்தி கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது அரசால் பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆசிரியர் சங்கங்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய பாடசாலைகள் முடிவடைந்த பின்னர் யாழிலுள்ள பாடசாலைகள் முன்பாக அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, "ரணில் – ராஜபக்ஷ அரசால் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளைக் கண்டிக்கின்றோம்", "ஆசிரியர் உரிமைகளை அடக்குமுறையால் பறிக்காதே", "வாக்குறுதி கொடுத்த சம்பள உயர்வை வழங்கு", "மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிக்காதே" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இனவாத...

பல கட்சிகளைக் கொண்ட ஜனநாயகத்தில் தற்போதுள்ள அரசியல் வேறுபாடுகளைப் பேணி புதிய நாடு, புதிய பொருளாதாரம் மற்றும் புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

### புறக்கோட்டையில்...

கொழும்பில் இன்று காலை பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புறக்கோட்டை இரண்டாவது குறுக்குத் தெருவில் உள்ள எட்டு மாடிகளைக் கொண்ட ஆடை கடை ஒன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

ஏழு தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. தீப்பரவலினால் கடுமையான புகை சூழ்ந்தது என்று கொழும்பு தீயணைப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அந்த வர்த்தக நிலையங்களின் ஊழியர்கள் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது எனவும் வைத்தியசாலை வட்டாரத் தகவல் தெரிவித்தது.

### ஏன் நடவடிக்கை...

எடுக்கவில்லை எனக் கோரி பொலிஸ்மா அதிபருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"அம்பிட்டிய சுமன ரத்ன தேரர் கடந்த சில நாட்களாக விடுத்துவரும் அறிக்கைகள் குறித்து உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இந்த அறிக்கைகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

எங்கள் கட்சியின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனைத் தாக்கித் தேரர் தொடர்ச்சியாக அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் நாட்டின் தென்பகுதியில் வசிக்கும் தமிழ் மக்களை வெளிப்படையாக அச்சுறுத்தும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ளார். அவர்களைத் துண்டு துண்டாக வெட்டப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய அப்பட்டமான குற்றமாகும்.

பொலிஸார் ஏன் அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வில்லை?" – என்றுள்ளது.

# திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்தியர் திருமதி.பி.கயல்விழி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு வருடார்ந்த இடமாற்றத்தின் அடிப்படையிலும் தகுதியின் அடிப்படையிலும் திருமதி.பி.கயல்விழி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



அதன் அடிப்படையில் அவர் தனது கடமைகளை நேற்று முன்தினம் (25) பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் மூதூர் தள வைத்தியசாலையின் அத்தியட்சகராகவும், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரகவும் கடமையாற்றியிருந்தார்.

திருகோணமலை வைத்தியசாலையில் பல்வேறுபட்ட குறைபாடுகள் நிலவுவதாகவும் அவை சீர்செய்யப்பட்டு நோயாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் எனவும் அதற்காகப் பிரதிப் பணிப்பாளர் செயற்பட வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# 25 வயதுக்கு மேல் 4 இல் ஒருவருக்கு பக்கவாதம் ஏற்படும் அபாய நிலைமை!

இலங்கையில் 25 வயதுக்கு மேற்பட்ட 4 பேரில் ஒருவருக்கு பக்கவாதம் ஏற்படும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை பக்கவாதம் தொடர்பான சங்கத்தின் தலைவரும் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் நரம்பியல் நிபுணரான ஹர்ஷ குணசேகர விடுத்துள்ளார்.

ஒருவருக்கு ஒருமுறை பக்கவாதம் ஏற்பட்டால், அவர்களில் 25 வீதமானவர்களுக்கு மீண்டும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்று நரம்பியல் ஹர்ஷ குணசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.



ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே நரம்பியல் நிபுணர் ஹர்ஷ குணசேகர இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் சுமார் 2 லட்சம் பக்கவாத நோயாளிகள் உள்ளனர். 35 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இதற்காகப் பரிசோதனை செய்ய வேண்டும்.

நாடு முழுவதிலும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இதற்கான பிரிவுகள் இயங்கி வருகின்றன.

முகத்தின் ஒரு பக்கம் இழுப்பது, வார்த்தைகளில் தடுமாற்றம், கை அல்லது காலில் உணர்வு இழப்பது போன்ற உணர்வு ஆகியவை இதன் அறிகுறிகளாகும்.

இதுபோன்ற அறிகுறிகள் தென்பட்டால் அதிக மருந்துகளை உட்கொள்ளாமல் மருந்துவர்களிடம் செல்லுமாறு அவர் கேட்டுள்ளார்.

# சமுர்த்தி நிவாரணம் பெறுவதில் புறக்கணிக்கப்படும் தோட்ட மக்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை

(மஸ்கெலியா நிருபர்)




மஸ்கெலிய பிரதேச சபையின் கீழ் இயங்கும் சாமிமலை கவரவில கிராம சேவகர் பிரிவில் உள்ள ஆறு தோட்டங்களை சேர்ந்த மக்கள் சமுர்த்தி நிவாரணத்தை பெற்று கொள்வதில் புறக்கணிக்கபட்டு வருகின்றனர் என்று முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவில் கவரவில, பாக்றோ, சின்ன சோளங்கந்த, பெரிய சோளங்கந்த, மல்லியப்பு, டீசைட் ஆகிய தோட்ட மக்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தமக்கான சமுர்த்தி நிவாரணம் சம்பந்தமாக உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் இது வரை தமக்கான தீர்வு கிடைக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச் என்னதான் நடைமுறைப் படுத்தினாலும் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள சமுர்த்தி வங்கி மற்றும் உத்தியோகத்தர்கள் அதேபோல் நோர்வூட் சமுர்த்தி வங்கி மற்றும் அங்கு உள்ள உத்தியோகத்தர்கள் சமுர்த்தி நிவாரணம் வழங்கும் பணியில் பாகுபாடு காட்டுகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி அதிகாரிகளின் தரகர்களாகச் செயல்படுபவர்களின் சிபாரிசுகளுக்கு அமையவே இந்த நிவாரணம் வழங்கப்படுவதாகவும் வறிய குடும்பங்களை சேர்ந்த மக்களுக்கு சமுர்த்தி எட்டாக் கனியாக உள்ளது என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்த முன்வர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்




## காணாமல்...

ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரிடையே ஏற்பட்ட கைகலப்பு தொடர்பாக 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வவுனியா நகர சபை உள்ளக மண்ட பத்தில் இன்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அண்மை யில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற் றிருந்ததுடன், அதில் இருந்த ஒரு பகுதியி னர் அதில் இருந்து வெளியேறியிருந்தனர். இந்நிலையில் வெளியேறிய அணியி னரை வைத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வவுனியா மாவட்டத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு ஒன்றை மேற் கொள்வதற்காக கூட்டத்தினை ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்நிலையில் கூட்டத்திற்கு வருகை தந்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர் களுக்கும், வவுனியாவில் அண்மையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

பாதிக்கப்பட்ட தாய்மார் தமக்குள் கைகலப்பில் ஈடுபட்டனர். இதனையடுத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பை ஏற்படுத்தி தம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக முறையிட்டனர்.

கூட்டம் இடம்பெற்ற இடத்திற்கு வருகை தந்த வவுனியா நகர சபை செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கூட்டத்தை நடத்த விடாது இரு பகுதி தாய்மாரையும் அங்கிருந்து வெளியிற்றியிருந்தனர். வெளியேறிய இரு பகுதியினரும் வவு னியா பொலிஸ் நிலையம் சென்று தம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக முறைப் பாடு செய்தனர். குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, இரு பகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வராது ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்த நிலையில் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.

இதன்போது, வடக்கு - கிழக்கு காணா மல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி, செயலாளர் ஆனந்தன் நடராஜா லீலாதேவி, முல் லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சபிதா ராஸ்திரி, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வர்களான சண்முகராசா சறோஜினிதேவி, சிவாநந்தன் ஜெனிற்றா, செல்லத்துரை கமலா, பேரின்பராசா பாலேஸ்வரி ஆகி யோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

## தமிழக...

12 பேரின் விளக்கமறியல் எதிர்வரும் நவம்பர் 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளது.

இம்மாதம் 14ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி தமிழக மீன வர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் மூன்று படகுகளையும், அதிலிருந்த 12 மீனவர்க ளையும் கைது செய்தனர்.

அந்த மீனவர்கள் ஊர்காவல்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போது, அவர்களை இன்று (27) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு மீளவும் இன்று நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, 12 தமிழக மீனவர்களின் விளக்கமறிய லையும் நவம்பர் 8 ஆம் திகதி வரை நீடிக்க உத்தரவிடப்பட்டது.




## அம்பிட்டிய தேரரை...

- இவ்வாறு வலியுறுத்தினார் ஜன நாயக மக்கள் முன்னணி, தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான மனோ கணேசன்.

“ஜனாதிபதியைத் தூற்றிய இரா ஜாங்கன தேரரை, போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை, நகைச்சுவை பேச்சா ளர் நடாஷா எதிரிசூரியவை, ஐ.சி.சி. பி.ஆர். சட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் அரசு கைது செய்தது. இன்று தமிழ் மக் களைக் கொல்லுவேன், வெட்டுவேன் என்று பகிரங்கமாகக் கொலைவெறிக் கூச்சல் எழுப்பும் அம்பிட்டிய சுமன ரத்ன தேரரை ஜனாதிபதியின் அரசு கைது செய்யாதா எனக் கேட்க விரும்புகின்றேன். எல்லாவற்றையும் கடந்து செல்வதைப் போல் ஜனாதிபதி ரணில் இதையும் கடந்து போக முயற்சிக்கக் கூடாது” - என் றும் மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட் டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் இன்று அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அம்பிட்டிய சுமன ரத்ன தேரருக்கு தனது தாயின் கல்லறை தொடர்பில், மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்களுடன் அல்லது மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளருடன் ஏதும் பிரச்சினை இருக்குமாயின், அவை பற்றி அவர் பொலிஸில் புகார் செய்ய வேண்டும். மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதைக் கலந்து பேசும்படி மட்டக்களப்பு மாவட்ட செயலா ரைக் கடிதம் மூலம் கோர வேண்டும். அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இதை இடம்பெறச் செய்து, பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். இதுதான் சட்டப்படியான நாகரிக நடைமுறை.

இதைவிடுத்து சண்டியன் மாதிரியும், மனநோயாளி மாதிரியும் நடுதெருவுக்க வந்து, “தமிழர்களைத் துண்டு துண்டாக வெட்டுவேன், கொல்லுவேன், தெற்கில் வாழும் தமிழரைக் கொல்லுவேன்” என்றி ஹிஸ்டீரியாகாரனாக கத்துவது எந்த வகையில் நியாயம்?

ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் ஜனாதி பதி தன்னைத் தூற்றிய ராஜாங்கன தேர ரைக் கைது செய்தார். இன்று தமிழ் மக்க ளைக் கொல்லுவேன், வெட்டுவேன் என்று பகிரங்கமாகக் கூறும் இவரைக் கைது செய்ய மாட்டாரா எனக் கேட்க விரும்புகின் றேன். தமிழ் ஊடகங்களை அழைத்து, தமிழில் மொழி மாற்றி சொல்லுங்கள் என்றே ஆணவத் திமிருடன் கூறும் இந்தத் தேரரை ஜனாதிபதி கைது செய்ய மாட்டாரா எனக் கேட்க விரும்புகின்றேன். அல்லது இவர் ஒரு மனநோயாளி என அங்கொடையில் அடைத்து விடுங்கள்.

சில காலம் முன் ஜெரோம் பெர் னாண்டோ என்ற ஒரு போதகரையும், நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரி சூரிய ஆகியோரைக் கைது செய்ய முடியு மானால், ஏன் இவரைக் கைது செய்ய முடியாது? பார்க்கப்போனால், ஜெரோம் பெர்னாண்டோ, நடாஷா எதிரிசூரிய ஆகி யோர் பேசிய பேச்சுக்களை விட இவரது பேச்சு ஆயிரம் மடங்கு மோசமானது.

இன்று இந்த அம்பிட்டிய சுமன ரத்ன தேரரின் மட்டக்களப்பு விகாரையை நடத்த இலங்கை இராணுவம் உதவுகின்றது. நாட்டின் இராணுவம் இவருக்குச் சோறாக்கி சாப்பாடு போடுகின்றது. இவை பற்றிய தகவல்கள் எனக்குக் கிடைத்துள் ளன. மக்களின் வரிப்பணத்தில் சாப்பிடும் இவர் பல ஆண்டுகளாகவே இப்படி துவே சமாகப் பேசி வருகின்றார். பொலிஸ் அதிகாரிகளின் கன்னத்தில் அடிக்கின் றார். பொலிஸ் அதிகாரிகளின் சட்டையைப் பிடிக்கின்றார். பொலிஸ் அதிகாரிகளின் தொப்பியைத் தட்டி விடுகின்றார். மாற்று மத போதகர்களின் கன்னத்தில் அடிக் கின்றார். அரச அதிகாரிகளைக் கெட்ட வார்த்தைகளில் திட்டுகின்றார். அப்படியா னால், இவர் யார்?” - என்று கேள்வி எழுப்பினார் மனோ கணேசன் எம்.பி.



# ஜனாதிபதி மாளிகையை பார்வையிட்ட டக்ளஸ்!

காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (26) பார்வையிட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையைத் தனியார் பல்கலைக்கழகத்துக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்படுவதற்கான பூர்வாங்கப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நேற்று காலை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும் இந்த விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரியால், தொழில்நுட்ப பூங்கா உட்பட 8 அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான காணி உட்பட அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை வழங்குமாறு, நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த மக்கள் பிரதிநிதிகள், ஏற்கனவே தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளில் முறையான அனுமதிகள் எவையும் பெற்றுக் கொள்ளப்படாமல் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை, தற்போது தனியார் பல்கலைக்கழகத்துக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாளிகை அமைக்கப்பட்டுள்ளமையால் காணிகளை இழந்த பொது மக்களுக்கு நஷ்ட ஈடுகளும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில், புதிய திட்டங்களுக்கான அனுமதிகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி மாளிகையைத் தனியார் பல்கலைக்கழகத்துக்கு வழங்குவது தொடர்பில் தீர்மானகரமான நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றே தான் நம்புவதாகவும், மாளிகைக்கான கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவித்திருந்தார்.

மேலும், நகர அபிவிருத்தி அதிகார சபையால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையிலான குழுவொன்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கலகம் பிறந்தால் நல்லது

கலகம் பிறந்தால்தான் நியாயம் கிடைக்கும் என்பார்கள்.

தென்னிலங்கை ஆட்சி பீடத்துக்குள் இப்போதுதான் கலகம் பிறந்து, முரண்பாடுகள் வெளித் தோன்றத் தொடங்கி இருக்கின்றன. அதனால் நியாயம் கிட்டவும் வாய்ப்பு உண்டு.

கூட்டுக் களவாணிகள் மௌனம் சாதித்தால் உண்மை வெளிவராது. தரப்புகள் முரண்பட்டு, மோதி, போர் தொடங்கினால்தான் பண்ணிய திருகுதாளங்கள் அம்பலமாகச் சந்தர்ப்பம் நேரும்.

ரணில் - ராஜபக்ஷ கூட்டுக் களவாணி அரசின் உள்வீட்டில் மோதல்கள், முரண்பாடுகள் தோன்றி இருக்கின்றமை மெல்ல வெளிப்பட்டு வருகின்றது. இதனால், உண்மைகள் அம்பலமாகவும், நியாயங்கள் பிறக்கவும் வழி ஏற்படும் என்று நம்பலாம்.

கூட்டு அரசின் பிதாமகர்கள் இருவரும் - ரணில் விக்கிரமசிங்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் - இது விடயத்தில் அசாத்திய மௌனம் பேண, அவர்களின் பிரதானிகள் இப்போது உள்வீட்டுச் சமரை வீதிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் நன்மைக்குத் தான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டணி தர்மத்தை மீறி விட்டார், எதேச்சாதிகாரமாக செயல்படுகின்றார் என்றெல்லாம் ராஜபக்ஷ தரப்பில் நாமல் ராஜபக்ஷ பகிரங்கமாகக் கருத்து வெளியிடுகின்றார். பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்க ரணிலின் தலைமை ஆக்கபூர்வமாக எதுவும் செய்யவில்லை என்கிறார்.

அவரின் மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசமோ, ஆட்சிக்குக் கால் தடம் போடுவோம் என்ற கருத்துப்பட பகிரங்க வெளியில் அச்சுறுத்துகின்றார்.

ரணில் தரப்பிலிருந்தும் இந்த சகதி வீசலுக்குப் பதிலடி சரியாக வருகின்றது.

"மொட்டுக் கட்சிதான் இந்த அரசைத் தாங்கிப் பிடித்து நிற்கின்றது. காரியவசமும் நாமல் ராஜபக்ஷவும் உண்மையில் தங்கள் கோபத்தை - துணிச்சல் இருந்தால் - இந்த வரவு, செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்து, அரசைக் கவிழ்த்து, புதிய தேர்தலுக்குப் போக வாய்ப்பு அளிக்கட்டும்" - என்று சவால் விடுகின்றார் ரணில் தரப்பில் பிரதான நம்பிக் கையாளராக இப்போது தோற்றம் எடுத்திருக்கும் நிமல் லான்ஸா எம்.பி.

"இந்த அரசு மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார். நேற்றுத் தான் பிறந்தவர் மாதிரி அவர் பேசுகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியும். அந்த அரசில் அவரும் அமைச்சராக இருந்தவர்தான். கோட்டாபய ராஜபக்ஷ அரசினால் சீரழிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டி எழுப்புவதற்காகத்தான் மக்கள் விரும்பாத - மக்களுக்குப் பிடிக்காத - பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டியிருக்கின்றது" என்று விளக்கியிருக்கின்றார் நிமல் லான்ஸா.

சபாஷ். சரியான போட்டி.

நாமல் - நிமல் மோதல் ஆட்சிப் பீடத்திற்குள் கலகம் பிறப்பதற்கான ஆரம்பப் புள்ளி. இனி நியாயம் கிடைக்கும் என்று நம்புவோம்.

இந்த முரண்பாடு பொதுத் தேர்தலுக்கு வழிவகுமாயின் அது நியாயம் பிறப்பதற்கான அறிகுறிதானே...!



## கஞ்சா செடி வளர்த்தவர் பொலிஸாரால் கைது!

**(பாறுக் ஷிஹான்)**

சட்டவிரோதமாக 6.5 அடி உயரமான கஞ்சா செடியை பயிரிட்ட சந்தேக நபர் அம்பாறை உஹன பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை உஹன பொலிஸ் பிரிவக்கு உட்பட்ட குமாரிகம பகுதியில் இந்தக் கஞ்சா பயிரிடப்பட்டு வந்த நிலையில் வியாழக்கிழமை (26) மாலை பொலிஸாரின் சுற்றி வளைப்பின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

உஹன பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய இச்சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சுமார் 6.5 அடி உயரமான கஞ்சா செடி கண்டுபிடிக்கப்பட்டது.

கஞ்சா செடி அழிக்கப்பட்டதுடன், கைதான சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை உஹன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அம்பாறையில் பயறு பயிர்ச்செய்கை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலங்களில், இடைப் போகத்தில் பச்சைப் பயறு செய்கையை மேற்கொள்ள அம்பாறை மாவட்ட விவசாய விரிவாக்கல் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

நீர்ப்பாசன வசதியின்மையால், பெரும் போகத்தில் நெற்பயிர் செய்கையில் ஈடுபட முடியாத மேட்டு நிலங்களில் மேலதிக பயிராக பச்சைப் பயறை பயிரிடும் போது விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான உதவிகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

பச்சைப் பயறு அறுவடையின் பின்னர் அதற்கான சிறந்த சந்தை வாய்ப்பையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளையும் விவசாய திணைக்கள் மேற் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெரிய புராண படன நிறைவு

சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் பெரிய புராண நிறைவு விழா சுதுமலை விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதப் பெருமாள் ஆலய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சு. உதயபாலன் சிறப்பு விருந்தினராகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜனார்த்தனன் அகல்யா விசேட விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

# இலங்கையில் பிடிக்கப்படாத மீன்களையே இறக்குமதி செய்வதற்கு இங்கு அனுமதி!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இலங்கையில் அறுவடை செய்யப்படாத மீன்களையே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு செவ்வாய்க்கிழமை (24) விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்குச் சென்று அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அத்தோடு மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவிடம் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுவது தொடர்பாக வினவிய போது,

தகவலில் உண்மை நிலை இருப்பது போல் தெரியவில்லை. என்னுடைய இராஜாங்க அமைச்சருக்குத் தான் இலங்கைக் கடற்தொழில் கூட்டுதாபனத்தைக் கண்காணிக்கும், செயற்படுத்தும் பொறுப்பைக் கொடுத்திருக்கின்றேன். அவர் நேர்மையாக, நியாயமாக, சட்டபூர்வமாக செய்ததாகத்தான் கூறுகிறார்.-என்றார்.



இலங்கையை சூழ வளம்மிக்க கடல் இருக்கின்ற நிலையில் வெளிநாடொன்றில் இருந்து மீன்களை இறக்குமதி செய்யும் நிலை ஏன் ஏற்பட்டது என வினவிய போது,

இலங்கை கடற்தொழில் கூட்டுஸ்தாபனத்துக்கு எனது பணிப்புரை என்னவென்றால், இலங்கைக் கடற்றொழிலாளர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இலங்கையில் மிக குறுகிய அளவில் பிடிக்கப்படும் அல்லது பிடிக்கப்படாத மீன்களைத் தான் இறக்குமதி செய்யலாம் என்று கூறியிருக்கின்றேன்.

நியாயமான விலையில், தரமானதாக, திணைக்களத்தின் சட்ட திட்டங்கள் உட்பட்டவையாக இருக்க வேண்டும்.

இவ்வாறே இறக்குமதி செய்ய முடியும் என கூறியிருக்கின்றேன். அந்தவகையில்தான் இறக்குமதி செய்ததாகக் கூறுகிறார்கள். அதில் முறைகேடு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. அவ்வாறு இருந்தால் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆனால் ஊடகங்களில் தவறான செய்திகள் வந்திருக்கின்றன. இது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன்.-என்றார்.

இலங்கையில் மின்சார கட்டண அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பாமர மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் இது தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன என வினவிய போது,

இன்று நாடு இருக்கும் நிலையிலும் உலகத்தின் போக்குகள் யுத்தங்கள் சூழ்ந்திருக்கும் சூழலில் விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாமல்தான் இருக்கிறது. இது அனைவரையும் பாதிக்கிறது. ஆகையால் அதிலிருந்து நாங்கள் மீள வேண்டும்.

அதற்காகத்தான் இயற்கை மின்சார உற்பத்திக்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றோம். காற்றாடி, சூரிய ஒளி இவ்வாறு விரைவாக செய்து முடிப்போமாக இருந்தால் மின்விலையேற்றத்திலில் இருந்து, பாதிப்பிலிருந்து மக்களைப் பாதுகாத்து கொள்ளலாம்.-என்று தெரிவித்துள்ளார்.

# புற்று நோயாளர்களுக்கு நிதி சேகரிக்க உண்டியல் வழங்கல்

(சியாத்.எம்.இஸ்மாயில் )

அட்டாளைச்சேனை சமூக சேவை ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் ஏறாவூரில் இயங்கிவரும் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் நிதி சேகரிப்பு உண்டியல்களை கையேற்கும் நிகழ்வு (22) ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

புற்று நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான பராமரிப்புக்களை முழுவதுமாக இலவசமாக வழங்கிவரும் கிழக்கு புற்று நோயாளர் பராமரிப்பு நிலையத்தின் செலவீனங்களை ஈடுசெய்யும் முகமாக நன்கொடை நிதி சேகரிப்பு உண்டியல்களை நாடு முழுவதும் வழங்கி வருகின்றனர்.

அதன் ஓர் அங்கமாகவே அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நிதி சேகரிப்பு ஒருங்கிணைப்பை இந்த் ஒன்றியம் பொறுப்பேற்று நடத்தவுள்ளது.



இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம். ஹனீபா, அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய அதிபர் எம்.ஏ அன்சார், தலைவர் எஸ். எச்.சபீக், சிரேஷ்ட ஆலோசகர்களான ஏ.கே.சிஹாறத், எஸ்.எம்.எம்.நிஸாம், பொதுச் செயலாளர் ஏ.றிபாஸ், கிழக்கு புற்று நோயாளர் பராமரிப்பு நிலைய முகாமையாளர் நூஹுலெவ்வை, சந்தைப்படுத்தல் முகாமையாளர் இர்ஷாத் மற்றும் அங்கத்தவர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதில் முதற்கட்டமாக 100 உண்டியல்கள் நிதி சேகரிப்புக்காக வழங்கப்பட்டன.



# பாடசாலையின் தேவை தொடர்பில் கேட்டறிந்த முன்னாள் முதல்வர்

(அஸ்ஹர் ஆதம் )

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்துக்குக் கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வரும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் விஜயம் செய்தார்.

இங்கு விஜயம் செய்து இந்தப் பாடசாலையின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டார். தான் ஆரம்பக்கல்வி கற்ற இப்பாடசாலைக்கு தன்னால் முடியுமான உதவிகளைச் செய்து தருவதாகவும் வாக்குறுதியளித்தார்.

இதன்போது அதிபர் யூ.எல். நசாரால் பாடசாலையின் முக்கிய தேவைகள் அடங்கிய மகஜரொன்று கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர்கள் , ஆசிரியர்கள் , முதல்வரின் இணைப்புச் செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கொழும்பு சைவ மங்கையர் மாணவி கணித போட்டியில் முதலிடம் பெற்றார்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தனியார் கல்வி நிறுவனமொன்று கொழும்பு சுகதாச உள்ளக அரங்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை (22) ஒழுங்குசெய்திருந்த சர்வதேச மட்டத்திலான கணித போட்டியில் 5 நிமிடத்துக்குள் 55 கணக்குகளை மனக் கணிதத்தில் பதிவு செய்து கொழும்பு சைவ மங்கையர் பெண்கள் கல்லூரி இரண்டாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவி மகேஷ்வரன் விவிஷனா முதலிடம் பெற்று சர்வதேச சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இலங்கை,இந்தியா, பிலிப்பைன்ஸ், ஐக்கிய அரபு இராச்சியம், தன்சானியா, பங்களாதேஸ், நேபாளம், கிரேஸ், சைப்பீரியா, நியூஸீலாந்து மற்றும் பஹ்ரெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்ற இப்போட்டியில் 5 நிமிடங்களில் 80 கணித கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியிருந்தது.




இந்தப் போட்டியிலேயே அவர் சாதனை படைத்துள்ளார்.







# சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு கிடைத்தன ஐந்து தேசிய விருதுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம், அஸ்ஹர் ஆதம்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற நிகழ்வில் இந்த தேசிய விருதுகள் கிடைக்கப்பெற்றன.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், நெறிப்படுத்திய தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ். றிபாயா, வலய உதவி முகாமையாளர் எம்.எஸ்.எம் நௌஷாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீன் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த விருதைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.




தேசிய விருது பெற்ற சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜஃபர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ.அன்சார், ஏ.எம்.காலிதீன், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்களான ஏ.எம். நவாஸ், எஸ் எம் கமர்தீன் ஆகியோர் இந்த விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.





# வன்னி ஹோப் நிறுவனத்தால் மன்னார் பாடசாலையில் அபிவிருத்தி


(மன்னார் நிருபர்)

வன்னி ஹோப் நிறுவனத்தால் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்த நிலையில் புதன்கிழமை (25) காலை வைபவ ரீதியாக பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டன.

வன்னி ஹோப் நிறுவனத்தால் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட பெண்கள் மலசல கூட தொகுதி, ஆரம்ப பிரிவுக்கான மலசல கூடத் தொகுதி, விடுதி, மாணவர்களுக்கான குளியல் அறைத் தொகுதி மற்றும் குழாய்க் கிணறு ஆகியவை அமைத்துக் கொடுக்கப்பட்டன.

வேலைத் திட்டங்களுக்கான நிதி உதவியை அமரர் கே.சிற்றம்பலத்தின் குடும்பத்தினர், வைத்தியர் வானி பிரேமஜித் மற்றும் வின்திரன், ராஜினி குடும்பத்தினர் வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலர் எம்.பிரதீப், வன்னி ஹோப் நிறுவன பிரதி நிதிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# ஒரு கோடி 25 லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு

## குழந்தைகளுக்கான அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் கையளிப்பு

புதிதாய் பிறந்த சிசுக்களுக்கான அதி திவிர சிகிச்சை பிரிவுக்கு (ஜேஊரு) ஒரு கோடி 25 லட்சம் ரூபா பெறுமதியான நேழயெவயட எநவெடையவழச (உடைா குசநஙரநஉெல) குயடியைெ உகுமுை இயந்திரதைத் தொழிலதிபர் எஸ். கே.நாதன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட வைத்தியர்கள், தாதியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.






# டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்தால் நடவடிக்கை

## கல்முனை சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் இடைவிட்ட மழை காரணமாக தேங்கி நிற்கும் நீர் மூலம் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

எனவே டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய சூழலை வைத்திருந்தால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்துள்ளார்.

வீடுகள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், வெற்று வளவுகள், மதஸ்தலங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொதுச் சந்தைகள் போன்ற இடங்களில் மழைநீர் தேங்கிக் காணப்படுவதால் டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கக்கூடும்.



எனவே பொது மக்கள் இவ்வாறான இடங்களை அடையாளம் கண்டு நீர் தேங்கி நிற்கும் சூழலை இல்லாதொழிக்க வேண்டும். குப்பை கூளங்களை குழி தோண்டி புதைக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தற்போது பரீட்சைகள் இடம்பெற்று வருவதால் பரீட்சைகள் நிறைவு பெற்றதும் பாடசாலை வளாகத்தில் சிரமதானம் மூலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வீடு வீடாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தற்போது பரிசீலனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அவர்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குங்கள்.

இதனையும் மீறி டெங்கு நுளம்புகள் பரவும் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.



# அட்டாளைச்சேனையில் பயனாளிகளுக்கு ஆடுகள்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்ட ஆடு வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் எண்ணக்கருவுக்கு அமைய விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் கிராமிய பொருளாதாரப் பிரிவால் தெரிவு செய்யப்பட்ட 7 பயனாளிகளுக்கு தலா 3 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முசாபிர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். ஏ. மஜீட், அட்டாளைச்சேனை கால்நடை வைத்திய அதிகாரி எச். டகானா, கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஏ. எம். எஸ். ஹரிஸ் மௌலானா, பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ. எஸ். சபானா, எம். ஏ. சிபானா பானு, கமத்தொழில் அமைச்சின் கால்நடை பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. எம். எம். நஸபி மற்றும் பயனாளிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# கல்முனை சுகாதார பணிமனையின் இணையத் தளம் அங்குரார்ப்பணம்

(நூருல் ஹுதா உமர், அ.அஸ்வர், எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகபூர்வ இணையதளம் திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவப் பிரிவு இணைய தளத்தை வடிவமைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜீப்பால் இணைப்புச் செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் இணையத் தளத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஸ்தாபகர் தினத்தில் மரநடுகை!



(அஸ்ஹர் ஆதம், யூ.கே. காலித்தீன்)

தென் கிழக்கு பல்கலைக்கழக ஸ்தா பகர் தினத்தை முன்னிட்டு மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலை வரும் முன்னாள் அமைச்சருமான மறைந்த மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பால் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 27 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்கலைக் கழக வளாகத்தில் மரநடுகை இடம்பெற்றது.

தென் கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மரநடுகை நிகழ்வின் போது பீடாதிப திகள், பதில் பதிவாளர், நூலகர், பேராசிரி யர்கள், நிர்வாக உத்தி யோகத்தர்கள், பொறியியலாளர், திணைக்களங்களின் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கங்க ளின் தலைவர்கள், கல்விசார உத்தியோ கத்தர்கள் கலந்து கொண்டனர்.



## பாராட்டிக் கௌரவிப்பு

(அஸ்ஹர் ஆதம் )

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் புதல்வர் அமான் அஷ்ரப் அக்கரைப்பற்றில் வைத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆற்றி வரும் சமூக சேவையைக் கருத்தில் கொண்டே பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பிரபல சமூக சேவையாளரும் வைத்தியருமான கே.எல். நக்பரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இவர் பொன்னாடை போர்த்தி மற்றும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## கல்லடி இராமகிருஷ்ண மிஷனில் ஏடு தொடக்கும் நிகழ்வு

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் விஜயதசமி தினத்தன்று ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனில் அமைந்துள்ள ஆலயத்தில் நடைபெற்ற ஏடு தொடக்கும் நிகழ்வில், மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி நீலமாதவானந்தாஜீ மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் உதவி மேலாளர் சுவாமி கராச்சிதானந்த ஜீ மஹராஜ் ஆகியோரால் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கப்பட்டது.





# நொச்சிமுனையில் கைத்தறி உற்பத்தி!

(பழுவூரான்)

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நொச்சிமுனை கிராம சக்தி மக்கள் சங்கத்தினரின் கைத்தறி உற்பத்தி கிராம திறப்பு விழா செவ்வாய்க்கிழமை (24) நொச்சிமுனை கிராம உத்தியோகத்தர் பிரிவில் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் இடம்பெற்றது.

"ஒரு கிராமத்துக்கு ஒரு உற்பத்தி இடம்பெறல்" எனும் தொனிப்பொருளில் நொச்சிமுனைப் பிரிவில் கைத்தொழில் கிராமத்தை உருவாக்கி, அதன் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன், அந்தப் பகுதியில் ஏற்படும் சமூக சீர்கேடுகளில் இருந்து மக்களையும், இளைஞர்களையும், சமூகத்தையும் பாதுகாத்துக் குடிசைக் கைத்தொழிலை மேம்படுத்துவதே இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

கிராம சக்தி மக்கள் சங்க உறுப்பினர்கள் ஏறத்தாழ 20 பேர் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இதற்குத் தேவையான பயிற்சிகள்,



தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் மூலப் பொருள்களை கிராமிய தொழிற்துறைத் திணைக்களம் வழங்குவதுடன், அவற்றுக்குரிய சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்தி கொடுக்கிறது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய தொழில் துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி.ரிசாணா சாரங்கனும், சிறப்பு அதிதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜெ.கணேசமூர்த்தியும், திருவள்ளுவர் சிக்கன கூட்டுறவுச் சங்கம், மகளீர் மேம்பாட்டு அமைப்பு, கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கல்லடி, நொச்சிமுனை, நாவற்குடா கிராம உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# கர்ப்பிணி தாய்மாருக்கு போசணைப் பொருள்கள்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

கர்ப்பிணி தாய்மாருக்கு போசணைப் பொருள்கள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேசமான கொக்கட்டிச்சோலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட 100 கர்ப்பிணித் தாய்மாருக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான போசணைப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. கொக்கட்டிச்சோலை கலாச்சார மண் டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. கிழக்கு மாகாண இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரெட்ன வின் ஆலோசனையின் பேரில் பொருள் கள் வழங்கப்பட்டன. இந்த உதவிக்கு சர்வமத அமைதிக்கான அமைப்பு அனுசரணை வழங்கி யிருந்தது.



# அயோத்தி ராமர் கோயிலில் ராமர் சிலை பிரதிஷ்டை

## - பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பு



அயோத்தி ராமர் கோயிலில் ஜனவரி 22 ஆம் திகதி, பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

இதற்கான அழைப்பிதழை ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த் ஷேத்ரா அறக்கட்டளை குழுவினர், பிரதமர் மோடியை நேற்று சந்தித்து வழங்கினர்.

நீண்டகால சட்ட போராட்டத்துக்குப்பின் ராமஜென்ம பூமியில் ராமர் கோயில் கட்டுவதற்கான இடம் கையகப்படுத் தப்பட்டு, அங்குகட்டுமான பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் ராமர் கோயில் கருவறையில் அடுத்தாண்டு ஜனவரி 22 ஆம் திகதி ராம் லல்லா சிலையை பிரதிஷ்டை செய்ய, ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த் ஷேத்ரா அறக்கட்டளை குழுவினர் முடிவு செய்தனர்.

அவர்கள் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று அவரது இல்லத்தில் சந்தித்து, ராமர் சிலை பிரதிஷ்டை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தனர். இதை பிரதமர் மோடி ஏற்றுக் கொண்டார்.

இது குறித்து சமூக வலைத்தளத் தில் பிரதமர் மோடி விடுத்துள்ள செய்தி யில்,

இன்றைய நாள் உணர்வுபூர்வமானது. ஸ்ரீ ராம ஜென்மபூமி தீர்த் ஷேத்ரா அறக்கட்டளை நிர்வாகிகள் என்னை வீட்டில் வந்து சந்தித்து, அயோத்தி ராமர் கோயில் சிலை பிரதிஷ்டை விழா வில் பங்கேற்கும்படி அழைப்பு விடுத் தனர்.

நான் மிகவும் ஆசிர்வதிக்கப்பட்டது போல் உணர்கிறேன். இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியை நான் காண்பது, எனது வாழ்நாளில் நான் செய்த பாக்கியம் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அயோத்தி அறக்கட்டளை நிர்வாகிகளுடன் எடுத்துக் கொண்ட போட்டோவையும் வெளியிட்டு ராமபக்தர் களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத், உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகி யோர் உட்பட ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர் என ராமர் கோயில் அறக்கட்டளையின் பொதுச் செயலா ளர் சம்பத் ராய் கூறியுள்ளார்.

# பா.ஜ.கவின் அரசியல் கூடாரமாக ஆளுநர் மாளிகை மாறிவிட்டது

## - வைகோ கண்டனம்

ஆளுநர் மாளிகையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், ஒரு நபர் பெட்ரோல் குண்டு வீச துணிந்தது கடும் கண்டனத்துக்குரியதாகும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், சென்னை, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையான ராஜ்பவன் மீது, நேற்று முன்தினம் முதன்மை நுழை வாயிலில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது.

இதுகுறித்து, ஆளுநர் மாளிகை செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டு இருக்கிறது . அதில், பல மாதங்களாக, ஆளுநரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றன. இதில் பெரும்பாலும், தி.மு.க., தலைவர்கள் மற்றும் அதன் கூட்டணிக் கட்சியினர் வாய்மொழி வாயிலாக, பொதுக்கூட்டம் மற்றும் சமூக வலைதளம் வாயிலாக, ஆளுநர் பற்றி அவதூறாக மிரட்டல் விடும் வகையில் பேசி வருகின்றனர்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநரை பணி செய்ய விடாமல் தடுக்கும் வகையில் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள இந்தச் செய்திக் குறிப்பு விஷமத்தனமான அரசியல் உள்நோக்கம் கொண்டது ஆகும்.

தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சி களின் மீது ஆளுநர் பழி போட்டு இருப்பது, ஆளுநர் மாளிகை பா.ஜ.கவின் அரசியல் கூடாரமாக மாறி இருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் மீது பழி போடும் ஆளுநர் நோக்கம் முறியடிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# 'ஒக்டோபர் 7' தாக்குதலுக்கு திட்டமிட்ட ஹமாஸ் புலனாய்வுப் பிரிவு தலைவர் பலி!

## - இஸ்ரேல் பாதுகாப்புப் படை தகவல்



ஹமாஸ் அமைப்பின் புலனாய்வு பிரிவின் துணைத் தலைவர் ஷாதி பாரூத் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையால் கொல்லப்பட்டுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் மிகத் தீவிரமான பதில் தாக்குதலை நடத்தி வருகிறது.

இஸ்ரேல் தனது அடுத்தடுத்த நகர்வுகளை மிகத் துல்லியமாகவும், அதிக விழிப்புடனும் எடுத்து வைக்கிறது. இதனால், இஸ்ரேலின் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பு தங்களுடைய முக்கிய படைத் தளபதிகளை அடுத்தடுத்து இழந்து வருகிறது.

அந்த வகையில் சமீபத்தில் இஸ்ரேல் உடனான போரில் ஹமாஸ் படையின் அப்துல் ரஹ்மான், கலீல் மஹ்ஜாஸ் மற்றும் கலீல் டெத்தாரி ஆகிய மூன்று துணைத் தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தற்போது ஹமாஸ் அமைப்பின் புலனாய்வு பிரிவின் துணைத் தலைவர் ஷாதி பாரூத்தை இஸ்ரேலி பாதுகாப்பு படை கொன்றுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

ஷாதி பாரூத் இதற்கு முன்னர், கான் யூனிஸ் என்றப் பகுதியில் பட்டாலியன் குழுவை வழிநடத்தி வந்திருக்கிறார். அதோடு தீவரவாதக் குழுவின் உளவுத்துறை இயக்குநரகத்தில் பல்வேறு பதவிகளை வகித்திருக்கிறார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த பல திட்டங்களை வகுத்து கொடுக்க உதவியிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

இதுவரை இஸ்ரேல் மக்கள் 1400 பேர் உயிரிழந்துள்ளனர். 220 பேர் பணயக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் வசம் உள்ளனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் நடத்தி வரும் பதில் தாக்குதலில் காசாவில் 7 ஆயிரத்து 28 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஹமாஸ் சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

# சீன முன்னாள் பிரதமர் லீ கெகியாங் காலமானார்!




சீனாவின் முன்னாள் பிரதமர் லீ கெகியாங் காலமானார். அவருக்கு வயது 68. மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

லீ கெகியாங் சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர். கட்சியில் செல்வாக்கு நிறைந்த அவரை சீன ஜனாதிபதியாக ஜி ஜின்பிங் மீண்டும் பதவியேற்ற பின்னர் ஓரங்கட்டத் தொடங்கினார்.

இதனால் தீவிர அரசியலில் இருந்து அவர் விலகியிருக்க நேர்ந்தது. பிரதமர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று ஷாங்காய் நகரில் வசித்துவந்த அவர் 10 மாதங்களுக்குப் பின்னர் இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

கிழக்கு சீனாவின் அனஹுய் மாகாணத்தில் பிறந்த லீ கெகியாங் இளமையில் வறுமையில் கஷ்டப்பட்டார்.

சீன கலாசார புரட்சிக் காலத்தில் அவர் தனது தந்தையுட விவசாய நிலங்களில் பாடுபட்டுக் கொண்டிருந்தார்.